திரு. இ. ரெ. இராசமாணிக்கம் : தலைவரவர்களே, தமிழ்நாட்டில் பெரும்பாலான இடங்களில் உயர்நிலைப்பள்ளி கீற்றுக் கொட்டகைகளில் இயங்குகின்றன. அரசாங்கத்தில் போதுமான நிதி ஒதுக்கப்பட்டு, அவற்றுக்கு நிரந்தரமான கட்டிடம் கட்டிக்கொடுக்க ஆவன செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இதை நாம் வேறு வகையில் கடனாகப் பெறுவதற்கு ஒரு முயற்சி மேற்கொண்டு வருகிறோம். இப்போதிருக்கிற நிலைமையில் நமக்கு 100 கோடி ரூபாய் தேவைப்படுகிறது, குறைந்த பட்ச வசதிகளை மட்டும் செய்து தருவதற்காக. அவ்வளவு பெரிய தொகையைக் கடனாகப் பெறுவதற்கு மத்திய அரசு எல். ஐ. ஸி. நிறுவனமோ அல்லது வேறு ஏதாவது நிதி நிறுவனமோ முன்வருமேயானால் நாம் இந்தத் தேவையைப் பூர்த்தி செய்துகொள்ளமுடியும் என்று கருதி அவர்களை அணுகிக்கொண்டு வருகிறோம். அவர்கள் முடிவாக இல்லை என்று சொல்வார்களானால் அதற்குப் பிறகு மாநில அரசு என்ன செய்ய வேண்டும் என்பதுபற்றிச் சிந்திக்கும்.

தமிழாசிரியர்கள் தலைமை ஆசிரியர்களாகப் பதவி உயர்வு பெறுவதற்கான விதி முறைகள்

*வினா எண் 107— திரு. வேடசந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழாசிரியர்கள் உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் பதவி பெறுவதற்கு அரசு விதித்துள்ள விதிகளை தளர்த்த தமிழ்நாடு மேனிலை தமிழ்மொழி ஆசிரியர் கழகம் அரசைக் கோரியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அரசு அதன்மீது எடுத்துள்ள நடவடிக்கை விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (ஆ) : தமிழாசிரியர்கள் உயர்நிலை மற்றும் மேனிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களாக பதவி உயர்வு பெற அவர்கள் பி. டி. பட்டம் பெற்றபின் உள்ள பணிக் காலமே கணக்கில் எடுக்கப்படுகிறது. இதை மாற்றி, முதனிலைத் தமிழாசிரியர்களாக பணியாற்றிய காலத்தையும் சேர்த்து கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும் என திருச்சி மாவட்டம் இலால்குடி தமிழகத் தமிழாசிரியர்கள் கழகம் மற்றும் சேலம் மாவட்டத் தமிழாசியர்கள் கழகம் கோரிக்கை அனுப்பியது. இக்கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு அது ஏற்க இயலாது என முடிவு எடுக்கப்பட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1983 மார்ச் 7]

டாக்டர் கே. சமரசம் : இன்றையதினம் இந்தியத் துணைக் கண்டத்தில் இந்தி படித்தால் இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்களில் பணிக்கு வாய்ப்பிருப்பதாகவும் ஆங்கிலம் படிக்கிற நிலையில் அத்தகைய வாய்ப்பு மிகவும் அதிக அளவில் இருப்பதாகவும் இருக்கிற அதே நேரத்தில் தாய்மொழியாம் தமிழ் படிப்பதற்கு ஊக்கம் அளிக்கிற வகையில் மற்ற விதிகளை தளர்த்தி முன்னுரிமை அளிக்க ஏன் பரிசீலனை செய்யக்கூடாது என்பதற்கு விளக்கம் அளிக்க வேணடுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஒரு பொறுப்புக்கு என்றிருக்கிற தகுதிகளின் அடிப்படையில் அவர்களுடைய அனுபவத்தின் அடிப்படையில் சமமான தகுதி உடையவர்களுக்கு, சமமான அனுபவம் உடையவர்களுக்கு தரப்படுகிற வாய்ப்புகள் பற்றித்தான் அந்த அடிப்படையில்தான் பரிசீலிக்கிறோமே தவிர தமிழ், ஆங்கிலம், கணக்கு என்ற நிலையில் நாம் வைத்து பரிசீலிப்பதில்லை. தமிழ் சொல்லித் தருகிறவர்களும், தமிழன் தான், ஆங்கிலம் சொல்லித் தருகிறவர்களும் தமிழன்தான், கணக்கு சொல்லித் தருகிறவனும் தமிழன்தான். ஆகவே தமிழ் ஆசிரியர் பதவி என்பது தமிழனைப் பொருத்ததேதவிர வெறும் மொழியைப் பொறுத்ததல்ல, அல்லது கணக்கு அல்லது ஆங்கிலத்தைப் பொருத்ததும் அல்ல.

திரு. குமரி அனந்தன் : தலைவர் அவர்களே, படிப்புக் காலமும் பயிற்சிக் காலமும் மற்ற ஆசிரியர்களுக்கும் தமிழ் ஆசிரியர்களுக்கும் ஒரேபோல் இருக்கிற காரணத்தினால்தான் தமிழ் ஆசிரியர்கள் தலைமை ஆசிரியர் பதவி ஏற்பதற்கு அதிகக் காலம் வேண்டுமென்று சொல்வது தவிர்க்கப்படுமா என்று கேட்கிறார்கள்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அப்படி சமமாக இல்லாததுதான் இந்தப் பிரச்சினை எழும்பவே காரணம். குறிப்பாக பி.டி. பயிற்சி என்பது ஒரு ஆண்டுக் காலம், அதே நேரத்தில் தமிழ் ஆசிரியருக்கான பயிற்சிக் காலம் ஆறு மாத காலம்.

திரு. பாபு ஜனார்த்தனன் : தலைவர் அவர்களே, இந்த ஆசிரியர்களில் தமிழ் சொல்லித் தருபவர்களும் தமிழன்தான் இந்தி சொல்லித் தருபவர்களும் தமிழன்தான், ஆங்கிலம் சொல்லி தருபவர்களும் தமிழன் தான் என்ற ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். தமிழ் ஆசிரியர்களுக்கு தலைமை ஆசிரியர் பதவி கொடுக்க வேண்டுமென்ற கருத்தை நமது இதய தெய்வம் அண்ணா அவர்கள் சொல்லிக் கொண்டிருந்தார்கள். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புனர்பரிசீலனை செய்து தமிழ் ஆசிரியர்களுக்கு தலைமை ஆசிரியர் பதவி கொடுப்பதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

[1983 மார்ச் 7

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் : நமது இதய தெய்வம் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிக்குப் பின்னால் நீங்கள் ஏழாண்டுக் காலம் ஆட்சியில் இருந்தபோது இந்தக் கோரிக்கையை நாங்கள் ஏற்றுக்கொண்ட அளவிற்குக்கூட நீங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

பேருந்துகளைத் தாக்குவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க தனிச் சட்டம்

*வினா எண். 304—திருவேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு கூட்டுறவு — சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பயணிகள் செல்லும் பேருந்து மீது கல்லெறிவோர் மீதும், பேருந்தை தாக்குவோர் மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்க தனிச் சட்டம் கொண்டு வரப்படுமா ?

மாண்புமிகு திரு சி. பொன்னையன் : இது குறித்து புதிதாகக் கொண்டுவரப்பட்ட சட்டம், சட்டம் 29/82, 15—5—1982 ஆம் நாளிலிருந்து அமலில் உள்ளது.

திரு கோவைத்தம்பி : இப்படிப்பட்ட பயணிகள் செல்லும் பேருந்துகள் மீது ஆர்ப்பாட்டங்கள், ஸ்ட்ரைக் என்ற பெயரால் கல் எறிபவர்கள் மீது சிறை தண்டனை விதிப்பதோடு கூட அந்தப் பேருந்துகளுக்கான தொகையை, நஷ்டமான தொகையை அவர்கள் சொந்த சொத்தை ஜப்தி செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு சி. பொன்னையன் : 1982 ஆம் ஆண்டு 29-வது சட்டத்தில் ஐந்தாவது பிரிவில் அதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

திரு என். எஸ். வி. சித்தன் : பொதுச் சொத்துக்களை நாசம் செய்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமே. தற்போதுள்ள சட்டத்தில் அதற்கு வழிவகை இருக்கிறதா ? நமக்கு இன்று இருக்கிற புதிய சட்டம் மாதிரி இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலாவது இயற்றப் பட்டிருக்கிறதா ?